### திருவண்ணாமலையில் அருங்காட்சியகம் அமைப்பார்!

# தமிழகம் முழுவதும் பல தாஜ்மகால்களை உருவாக்கியவர் அமைச்சர் எ.வ.வேலு!

## நிதித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் த.உதயச்சந்திரன் பேச்சு!

*திருவண்ணாமலை, ஜன. 20-*

திருவண்ணாமலை மண் தமிழ்சமூகத்தின் வரலாற்று அடிப்படையை உறுதி செய்யும் மண், தமிழகம் முழுவதும் பலதாஜ்மகால்களை உருவாக்கிய அமைச்சர் எ.வ.வேலு திருவண்ணாமலையில் அருங்காட்சியகம் அமைக்காமல் விடமாட்டார் என்று அருணை தமிழ்ச்சங்கம் சார்பில் தமிழ் புத்தாண்டு - தமிழர்திருநாள் விழா முன்னிட்டு தமிழ்நாடு அரசின் நிதித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் த.உதயச்சந்திரன் சாதனையாளர்களுக்கு விருதுகள் வழங்கி சிறப்புரையாற்றிய போது குறிப்பிட்டார்.




ஒவ்வொரு ஆண்டும் அருணை தமிழ்ச்சங்கம் சார்பில் தமிழ்புத்தாண்டு - தமிழர்திருநாள் விழா கொண்டாடப்பட்டு வருகிறது. விழாவில் தமிழ் தொண்டாற்றியவர்களுக்கு மறைமலை அடிகளார் விருதும், பொது தொண்டாற்றியவர்களுக்கு டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி விருதும், கலைத் தொண்டாற்றியவர்களுக்கு கலைவாணர் என்.எஸ்.கே. விருதும், ஆன்மீக தொண்டாற்றியவர்களுக்கு கிருபானந்தவாரியார் விருதும், சமூகநீதி தொண்டாற்றிவருபவர்களுக்கு முத்தமிழறிஞர் கலைஞர் விருதும் வழங்கப்படுகிறது. மேலும் திருவண்ணாமலை மாநகராட்சி 39 வார்டுகளிலும் வெற்றி பெற்ற மகளிருக்கு பரிசுகள் வழங்கப்படுகிறது.

18.01.2026 ஞாயிற்றுக்கிழமை அன்று திருவண்ணாமலை, திருக்கோவிலூர் சாலை, நகராட்சி மேல்நிலைப்பள்ளி எதிரில் அமைக்கப்பட்டுள்ள அருணகிரிநாதர் அரங்கத்தில் அருணை தமிழ்ச்சங்கம் சார்பில் தமிழ் புத்தாண்டு - தமிழர்திருநாள் விழா நடைபெற்றது.

விழாவிற்கு திருக்குறள் பேரவைத் தலைவர் ப.கண்ணன், அருணகிரிநாதர் விழா குழு தலைவர் வி. தனுசு, மாவட்ட தமிழ்ச் சங்கத் தலைவர் ப.இந்திரராஜன், அருணகிரிநாதர் மணி மண்டப அறக்கட்டளைத் தலைவர் மா.சின்ராஜ், கம்பன் தமிழ்ச் சங்க தலைவர் புலவர் ஆ.ஆறுமுகம், அறுபத்து மூவர் ஆய்வு மையத் தலைவர் இரா. வெங்கடேசன், திருக்குறள் சமுதாயம் தலைவர் தமிழ்செல்வி கமலக்கண்ணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

காலை 9.00 மணிக்கு திருக்குவளை சகோதரிகள் முனைவர் மு.சுந்தரி, மு. சாவித்ரி ஆகியோரின் நாதஸ்வர இசை நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சியை செய்யாறு சட்டமன்ற உறுப்பினர் ஒ.ஜோதி தொடங்கி வைத்தார்.

காலை 9.30 மணிக்கு அருணை மருத்துவக் கல்லூரி குழுவினரின் பரதநாட்டியம் நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சியை வந்தவாசி சட்டமன்ற உறுப்பினர் எஸ். அம்பேத்குமார் தொடங்கிவைத்தார்.

காலை 10.00 மணிக்கு 'மங்கலம் பொங்கட்டும்' என்ற தலைப்பில் கவியரங்கம் நடைபெற்றது. கவியரங்கத்துக்கு கவிஞர் நெல்லை ஜெயந்தா தலைமை வகித்தார். 'கலப்பை' என்ற தலைப்பில் கவிஞர் நந்தலாலாவும், 'மஞ்சள்' என்கிற தலைப்பில் கவிஞர் பால சண்முகதேவி அவர்களும், 'அரிசி' என்ற தலைப்பில் கவிஞர் இந்திரா விஜயலட்சுமி அவர்களும், 'கரும்பு' என்ற தலைப்பில் கவிஞர் தஞ்சை இனியன் அவர்களும் கவிதை பாடினார்கள். கவியரங்கத்தை சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி தொடங்கி வைக்கிறார்.

காலை 11.30 மணிக்கு 'குடும்ப வளர்ச்சிக்கு பெரிதும் உதவுவது ஆண்களின் உழைப்பா?, பெண்களின் பொறுப்பா?' என்ற தலைப்பில் பட்டிமன்ற நடைபெற்றது. பட்டிமன்றத்திற்கு விஜய் டி.வி. 'கலக்கப்போவது யாரு' புகழ், பேராசிரியர் கோ. பழனி அவர்கள் நடுவராக பொறுப்பேற்றார். 'ஆண்களின் உழைப்பே!' என்ற தலைப்பில் குறும்பட இயக்குநர் பாண்டிச்சேரி மதன் அவர்களும், கலைஞர் டி.வி. தணிகைவேலன் அவர்களும், 'பெண்களின் பொறுப்பே!' என்ற தலைப்பில் விஜய் டி.வி. திரைப்பட நடிகை அறந்தாங்கி நிஷா அவர்களும், விஜய் டி.வி. பாரதிகண்ணம்மா யோக தர்ஷினி அவர்களும் வாதிட்டனர். பட்டிமன்றத்தை ஆரணி நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். தரணிவேந்தன் தொடங்கி வைத்தார்.

அன்று பிற்பகல் 3.30 மணிக்கு வீரத்தமிழன் குழுவினரின் போர்ப்பறை நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சியை கலசப்பாகம் சட்டமன்ற உறுப்பினர் பெ.சு.தி.சரவணன் தொடங்கி வைத்தார்.

மாலை 4.00 மணிக்கு முனைவர் த.குமார் வழங்கும் ஸ்ரீ படவேட்டம்மன், ஸ்ரீ மாரியம்மன் குழுவினரின் தெருக்கூத்து நடைபெற்றது. நிகழ்ச்சியை செங்கம் சட்டமன்ற உறுப்பினர் மு.பெ.கிரி தொடங்கிவைத்தார்.

மாலை 5.00 மணிக்கு மாலதி மெலோடிஸ் வழங்கும் இசைத் தமிழ் தேனரங்கம் நடைபெற்றது. நிகழ்ச்சியில் கலைமாமணி மாலதி, கலைமாமணி சின்னப்பொன்னு, கலைமாமணி அனந்து, பாடகர் முகேஷ், பாடகர் கீர்த்திகா மற்றும் சொற்கோ இரா.கருணாநிதி ஆகியோர் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியை திருவண்ணாமலை நாடாளுமன்ற உறுப்பினர் சி.என். அண்ணாதுரை தொடங்கி வைத்தார்.

மாலை 7.00 மணிக்கு சாதனையாளர்களுக்கு விருதுகள் வழங்கம் நிகழ்ச்சி நடைபெற்றது.

விழாவில் தமிழ் தொண்டாற்றியவர்களுக்கான 'மறைமலை அடிகளார் விருது' எழுத்தாளர் பவா செல்லதுரை அவர்களுக்கும், பொது தொண்டாற்றியவர்களுக்கான 'டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி விருது' ஜெ.அம்பிகா அவர்களுக்கும், கலைத் தொண்டாற்றியவர்களுக்கான 'கலைவாணர் என்.எஸ்.கே. விருது' தாங்கல் ம.சேகர் அவர்களுக்கும், ஆன்மீக தொண்டாற்றியவர்களுக்கான 'கிருபானந்தவாரியார் விருது' வே.சாமுவேல் கென்னடி அவர்களுக்கும், சமூகநீதி தொண்டாற்றிவருபவர்களுக்கான 'முத்தமிழறிஞர் கலைஞர் விருது' கிருஷ்ண கஜேந்திரன் அவர்களுக்கும் மற்றும் பொற்கிழிகளையும் தமிழ்நாடு அரசின் நிதிதுறை கூடுதல் தலைமைச் செயலாளர் த. உதயசந்திரன் வழங்கினார்.

அருணைத் தமிழ்ச்சங்கத் தலைவரும், பொதுப்பணித் துறை அமைச்சருமான எ.வ.வேலு தலைமையுரை நிகழ்த்தினார்.,

விழாவில் கலந்து கொண்டு சாதனையாளர்களுக்கு விருதுகள் மற்றும் பொற்கிழி வழங்கியும், கோலப்போட்டியில் வெற்றி பெற்ற மகளிர்களுக்கு பரிசுகள் வழங்கியும், **தமிழ்நாடு அரசின் நிதித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் த.உதயச்சந்திரன் பேசியபோது...**

அருணை தமிழ் சங்கத்தை மும்மதத்தைச் சேர்ந்தவர்கள் ஒன்றிணைந்து நிர்வகித்து வருவதாக அமைச்சர் எ.வ.வேலு குறிப்பிட்டிருப்பது பெருமைக்குரியது. இது தமிழ் சமூகத்தின் உயர்ந்த பண்பாட்டை வெளிப்படுத்துகிறது. இங்கு மொழி தான் முதன்மை; மதமும் மற்ற அடையாளங்களும் அதற்குப் பிறகே. விருதுகள் பெருமை அடைவது அவற்றைப் பெறும் விருதாளர்களை அடிப்படையாகக் கொண்டே அமைகிறது.

கிருபானந்தவாரியார் பெயரில் ஆன்மீகத் தொண்டு விருது கென்னடி என்பவருக்கு வழங்கப்பட்டபோது கைதட்டல் நிகழ்ந்தது தமிழ்நாட்டில் மட்டுமே காணக்கூடிய தனித்துவமான பண்பாடு. திருவண்ணாமலை மண் சமணம், சைவம் ஆகியவை தழைத்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது. இன்றும் தொல்லியல் ரீதியாக முன்கற்காலத்தைச் சேர்ந்த பல தடயங்கள் இம்மண்ணில் கிடைத்து வருகின்றன. கீழடியில் கண்டெடுக்கப்பட்ட பொருட்கள் சுமார் 2600 ஆண்டுகளுக்கு முன்பு செழித்த நாகரிகத்தை வெளிப்படுத்துகின்றன. ஆனால் திருவண்ணாமலையில் அகழாய்வு மேற்கொண்டால், அதற்கு முன்பே இங்கு நாகரிகம் இருந்தது என்பதற்கான ஆதாரங்கள் கிடைக்கின்றன.

**தமிழ்ச் சமுகத்தின் தனிச் சிறப்பு!**

தமிழகத்தின் பெருமையை வெளிப்படுத்தும் வகையில் கீழடி, பொருநை அருங்காட்சியகம் சிறப்பாக அமைக்கப்பட்டதற்கு பொதுப்பணித்துறை அமைச்சரின் பங்கு முக்கியமானது, தமிழர் பெருமை குறித்து சாமானியர் முதல் உயர்பதவி வகிப்போர் வரை ஒரே நேர்கோட்டில் சிந்தித்து செயல்படுவது தமிழ்சமூகத்தின் தனிச்சிறப்பு.

5300 ஆண்டுகளுக்கு முன்பே தமிழர்கள் இரும்புத் தொழில்நுட்பத்தை கண்டுபிடித்து பயன்படுத்தியதை அறிவியல் பூர்வமாக நிரூபித்துள்ளோம். இந்திய துணைக்கண்டத்தின் வரலாறு இனி தமிழ் நிலப்பரப்பிலிருந்து எழுதப்பட வேண்டும் என தமிழக முதல்வர் பெருமையுடன் கூறியுள்ளார். முதுமக்கள் தாழியில் கிடைத்த இரும்பு மற்றும் நெல்மணிகள் புளோரிடா வரை அனுப்பி ஆய்வு செய்யப்பட்டதன் மூலம் தமிழர் இரும்புத் தொழில்நுட்பத்தை பயன்படுத்தியதை உறுதி செய்யப்பட்டுள்ளது.

திருவண்ணாமலை மாவட்டத்தில் பல அரசு அலுவலர்கள் ஆர்வத்துடன் தொல்லியல் பணிகளில் ஈடுபட்டு வருகிறார்கள், வார இறுதி நாட்களில் தொல்லியல் அடையாளங்களை தேடும் பணியில் ஈடுபடுகின்றனர். வருவாய்துறையின் பரிந்துரையின் பேரிலேயே கீழடி தொல்லியல் அகழாய்வு மேற்கொள்ளப்பட்டது. திருவண்ணாமலை மண் தமிழ் சமூகத்தின் வரலாற்று அடிப்படையை உறுதி செய்யும் மண் என்பதைக் காத்துக் கொள்ள வேண்டும்.

சைவமும் வைணவமும் தமிழ்நாட்டில் சிறந்து விளங்கியதால்தான் தமிழின் ஓசை காலம் கடந்து பாதுகாக்கப்படுகிறது. ஐரோப்பாவிற்கு வெளியே முதன் முதலாக அச்சுஇயந்திரத்தில் ஏறிய மொழி தமிழ் மொழியே . 1544ம் ஆண்டில் ரோமன் எழுத்துகளில் தமிழ் நூல் அச்சடிக்கப்பட்டது. இதற்காக தூத்துக்குடியைச் சேர்ந்த மூன்று சாமானிய தமிழர்கள் உழைத்தனர். தாஜ்மகால் எழும்புவதற்கு 100 ஆண்டுகளுக்கு முன்பே தமிழ் மொழி அச்சில் வந்தது.

தமிழர் பெருமையை அடுத்த தலைமுறைகள் அறிந்து கொள்ளும் வகையில் தமிழகத்தின் பல பகுதிகளில் அருங்காட்சியகங்கள் அமைக்கப்பட உள்ளது, கங்கை கொண்ட சோழபுரம், தஞ்சை, ராமநாதபுரம், ஈரோடு, மாமல்லபுரம் ஆகிய இடங்களில் அருங்காட்சியகங்கள் அமைக்கப்படுவதுடன், இறுதியாக திருவண்ணாமலையிலும் மிகச் சிறந்த தமிழர் அருங்காட்சியம் அமையும். தமிழக முழுவதும் பல தாஜ்மஹால்களை உருவாக்கிய பொதுப்பணித்துறை அமைச்சர் திருவண்ணாமலையில் அருங்காட்சியம் அமைக்காமல் விடமாட்டார். லட்சக்கணக்கான மக்கள் வந்து காணக்கூடிய வகையில் தமிழர் பெருமையை எடுத்துரைக்கும் அருங்காட்சியம் இங்கு நிச்சயம் உருவாகும்.

இவ்வாறு த.உதயச்சந்திரன் பேசினார்.

விழாவில் மாவட்ட ஆட்சித் தலைவர் க.தர்ப்பகராஜ், முன்னாள் மாவட்ட ஆட்சியர் பாஸ்கரபாண்டியன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சுதாகர், மாநில தடகள சங்க சீனியர் துணைத் தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன், மாவட்ட வருவாய் அலுவலளர் ராம்பிரதீபன், சட்டமன்ற உறுப்பினர்கள் த.உதயசூரியன், வசந்தம் கார்த்திகேயன், ப.கார்த்திகேயன் மற்றும் தமிழ்ஆர்வலர்கள், மருத்துவர்கள், வழக்கறிஞர்கள், மாணவர்கள் என ஆயிர கணக்கானோர் திரண்டி ருந்தனர்.

விழா ஏற்பாடுகளை அருணை தமிழ்சங்க செயலாளர் வே.ஆல்பர்ட், பொருளாளர் எம்.இ.ஜமாலுதீன், இணைச் செயலாளர் எ.வ.குமரன் அவர்களும் சிறப்பாக செய்து இருந்தனர்.



கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டம், உளுந்தூர்பேட்டை நகராட்சி 16வது வார்டு மீனாட்சிபுரத்தில் கழகத் துணை பொது செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்களின் பிறந்தநாள் மற்றும் தமிழர் திருநாளாம் தைப்பொங்கல் திருநாளை முன்னிட்டு விளையாட்டு போட்டி, கோலம் போட்டி வடக்கு மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் கலா சுந்தரமூர்த்தி தலைமையில் நடைபெற்றது, இவ்விழாவில் மாநில மகளிர் துணைச் செயலாளர் ஆ.அங்கயற்கன்னி, நகர கழக செயலாளர் டேனியல் ராஜ் ஆகியோர் கலந்துகொண்டு போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளை வழங்கினார்கள், இதில் வடக்கு மாவட்ட மகளிர் அணி துணை அமைப்பாளர்கள் சரஸ்வதி, நடை அம்மா, பாரதி, தகவல் தொழில் நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் அமுதா மற்றும் மகளிர் அணி நிர்வாகிகள் உள்ளிட்ட அனைவரும் கலந்து கொண்டனர்.

### புதுச்சேரி - வில்லியனூர் தொகுதியில்

# ஒரு கோடி ரூபாய் மதிப்பில் வளர்ச்சிப் பணிகள்!

## எதிர்க்கட்சித் தலைவர் இரா.சிவா தொடங்கி வைத்தார்!

*புதுச்சேரி, ஜன. 20 -*

வில்லியனூர் சட்டமன்றத் தொகுதியில் பயணியர் நிழற்குடை, சாலை மேம்படுத்துதல், கல்வெட்டு அமைத்தல் உள்ளிட்ட ஒரு கோடி மதிப்பிலான வளர்ச்சிப் பணிகளை எதிர்க்கட்சித் தலைவர் இரா.சிவா தொடங்கி வைத்தார்.



புதுச்சேரி மாநிலம், வில்லியனூர் சட்டமன்றத் தொகுதியில், முருங்கப் பாக்கம் முதல் வில்லியனூர் வரை உள்ள சாலையில் பாப்பாஞ்சாவடி, ஒதியம் பட்டு, திருக்காஞ்சி சாலை சந்திப்பில் இரு புறம் என நான்கு இடங்களில் ரூபாய். 22,35,312/- மதிப்பீட்டில் பேருந்து பயணியர் நிழற்குடை, ரூ.58,01, 000/- லட்சம் செலவில் ஒதியம்பட்டு செயிண்ட் ஜோசப் ஆஃப் குளூனி பள்ளிக்குச் செல்லும் தார்ச்சாலையை மேம்படுத்துதல்,ரூ.19,34,000/- லட்சம் செலவில் திருக்காஞ்சி - மணவெளி நான்கு முனை சந்திப்பில் ஆர்சிசி வடிகால் கல்வெட்டு ஆகிய பணிகள் என மொத்தம் ரூபாய் ஒரு கோடி மதிப்பிலான வளர்ச்சிப் பணிகளுக்கான நிகழ்ச்சி இன்று காலை நடந்தது.

புதுச்சேரி அரசின் பொதுப்பணித்துறை தேசிய நெடுஞ்சாலைப் பிரிவு, சாலைகள் மற்றும் கட்டிடங்கள் தெற்கு பிரிவு மூலம் மேற்கொள்ளப்படும் பணிகளை தொகுதி சட்டமன்ற உறுப்பினரும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சிவா அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில், பொதுப்பணித்துறை தேசிய நெடுஞ்சாலைக் கோட்ட செயற்பொறியாளர் பன்னீர், சாலைகள் மற்றும் கட்டிடங்கள் தெற்கு பிரிவு செயற்பொறியாளர் சந்திரகுமார், உதவிப் பொறியாளர்கள் சிவப்பிரகாசம், நடராஜன், இளநிலைப் பொறியாளர்கள் மணிவண்ணன், ராஜதினேஷ், குளூனி பள்ளி முதல்வர் எமிலியானா, நிர்வாகிகள் ஜேசிஜான், மேக்லின், டி.கே.பி. கமலக்கண்ணன், பி.ஆர்.டி.சி பாஸ்கர் மற்றும் தி.மு.க. தொகுதி செயலாளர் மணிகண்டன், பொதுக்குழு உறுப்பினர்கள் ராமசாமி, செல்வநாதன், இலக்கிய அணி அமைப்பாளர் சீனு. மோகன் தாசு, வர்த்தகர் அணி அமைப்பாளர் ரமணன், விவசாய அணி அமைப்பாளர் குலசேகரன், ஆதி திராவிடர் அணி அமைப்பாளர் ஆறுமுகம் என்கிற செல்வநாதன், தொ.மு.ச. தலைவர் அங்காளன், ம.தி.மு.க. கபிரியேல், மாநில துணை அமைப்பாளர்கள் சரவணன், ராமதாஸ், காளி,

ஆதிதிராவிடர் அணி துணைத் தலைவர் கதிரவன், வர்த்தகர் அணி துணைத் தலைவர் குரு என்கிர சன்முகசுந்தரம், தொகுத துணைச் செயலாளர் அரிகிருஷ்ணன், செயற்குழு உறுப்பினர் சுப்ரமணி, திருவேங்கடம், கிளைக் கழக நிர்வாகிகள் ராஜி, ஜனா, மிலிட்டரி முருகன், சிமெண்ட் சரவணன், கோடிப்பிரகாசம், கார்த்திகேயன், தட்சிணா மூர்த்தி, வெங்கடேசன், அன்பழகன், அன்புநிதி, கோவிந்தசாமி, கமல் பாஷா, சிவக்குமார், அமலோர் ஆசிரியர், பாலகிருஷ்ணன், சேகர், பாஸ்கர், மூர்த்தி, பாலு, நாகராஜ், பாண்டியன், அஞ்சாபுலி, அபிமன்னன், வீரமுத்து, அன்பரசன், பரதன், அருள் மணி, கலைமணி, கிருஷ்ண மூர்த்தி, தகவல் தொழில்நுட்ப அணி பிரவீன், லட்சுமணன், ஆனந்த், விநாயகம், மாரிமுத்து, அசார், கணேசன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### திராவிட இயல் ஆய்வாளர்

# பேராசிரியர் க. நெடுஞ்செழியன் துணைவியார் பேராசிரியர் சக்குபாய் மறைவு!

## திருச்சி அன்பில் படுகையில் நல்லடக்கம்!

*திருச்சி, ஜன. 20 -*

தமிழ்ப் பல்கலைக்கழக மேனாள் பேராசிரியரும் செம்மொழித் தமிழாய்வு விருது பெற்றவரும் திராவிட இயல் ஆய்வாளராகத் திகழ்ந்தவரும் பெரியார் பேருரையாளராக விளங்கியவரும் ஆன பேராசிரியர் முனைவர் க.நெடுஞ்செழியன் துணைவியார் பேராசிரியர் முனைவர் சக்குபாய் அவர்கள் 18.01.2026 ஞாயிறு இரவு தமது இல்லத்தில் மறைவுற்றார். சில மாதங்கள் உடல் நலமின்றி மருத்துவக் கண்காணிப்பில் இருந்துவந்தார்.



இவர் அரசுக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியராக 30 ஆண்டுகளுக்குமேல் பணியாற்றியவர். கணவரைப் போலவே தீவிரத் திராவிட இயக்க ஆய்வாளர். கணவரோடு இணைந்து பெரியார் கொள்கைகளைப் பரப்பும் அரும்பணியில் ஈடுபட்டுப் பெரியார் பேருரையாளர் ஆக விளங்கியவர். அரிய ஆய்வு நூல்கள் பல எழுதியவர்! ஏற்கெனவே பேராசிரியர் நெடுஞ்செழியன் மறைந்தது திராவிட ஆய்வுக்குப் பேரிழப் பாகும். நேற்றுப் பிற்பகல் திருச்சி அன்பில் படுகையில் இவர் உடல் நல்லடக்கம் செய்யப்பட்டது.

இந்த இணையருக்கு நகைமுத்து, குறிஞ்சி என இரண்டு மகள்கள் உள்ளனர்.

தி.மு.கழகத் தோழர்களும் திராவிடர் கழகத்தினரும் மறுமலர்ச்சி தி.மு.க. வினரும், தமிழ்த் தேசிய அமைப்பினரும் இறுதி வணக்கம் செய்தனர்.

நெடுஞ்செழியன் இளவல் பூ.துரையரசன் இறுதி ஏற்பாடுகளைக் கவனித்தார்.




விழுப்புரம் மாவட்டம் செஞ்சி கிழக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் செஞ்சி எம்.ஜி.ஆர். நகர் மாரியம்மன் கோவிலில் நடைபெற்ற சமத்துவப் பொங்கல் விழாவை முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு தொடங்கி வைத்து 1000 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், செஞ்சி பேரூராட்சி மன்றத் தலைவர் மொக்தியார் அலிமஸ்தான், ஒன்றியச் செயலாளர்கள் நெடுஞ்செழியன், விஜயராகவன், பச்சையப்பன், மாவட்ட கவுன்சிலர் அரங்க ஏழுமலை, பொதுக்குழு உறுப்பினர் மணிவண்ணன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**கோட்டூர் ஜப்பார்**

**சனவரி 20 (2020)**



**தனது இளமைக் காலத்திலேயே கழகப் பணியாற்றத் தொடங்கியவர்.**

**ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டப் பிரதிநிதியாகவும், கோட்டூர் ஒன்றியப் பொறுப்பாளராகவும், நாகை தெற்கு மாவட்ட சிறுபான்மையினர் நலஉரிமைப் பிரிவு அமைப்பாளராகவும் பொறுப்பு வகித்தவர்.**

**ஊராட்சி மன்றத் தலைவராகவும், புத்தகரம் கூட்டுறவு சங்க தலைவராகவும் பதவி வகித்தவர்.**

**இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டம் மற்றும் தலைமை அறிவித்த பல்வேறு போராட்டங்களில் கலந்து கொண்டவர்.**

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**